2018 ஜூன் 29]

(ஆ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கட்டுப்பாட்டில் உள்ள கல்லூரிகளில் கூடுதல் வகுப்புகள் ஏற்படுத்துதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

***திரு. அர. சக்கரபாணி**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கட்டுப்பாட்டில் உள்ள கல்லூரிகளில் கூடுதல் வகுப்புகள் ஏற்படுத்த வேண்டிய அவசியம்" குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை குறித்து மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு அறிவிப்பு தொடர்பான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி

திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கட்டுப்பாட்டில் உள்ள அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரியில் மாணவர் சேர்க்கை மற்றும் காலியிடம் பின்வருமாறு:

[திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்] [2018 ஜூன் 29

மாணவர்கள் சேர்க்கை விவரம்		காலியிடம் விவரம்
2015-2016 இளங்கலை—1260		
முதலாமாண்டு	414	6
இரண்டாம் ஆண்டு	408	12
மூன்றாம் ஆண்டு	356	64
முதுகலை-464		
முதலாமாண்டு	198	34
இரண்டாம் ஆண்டு	175	57
எம்ஃபில்-20		
முதலாமாண்டு	17	3
2016-2017 இளங்கலை-1260		
முதலாமாண்டு	407	13
இரண்டாம் ஆண்டு	414	6
மூன்றாம் ஆண்டு	408	12
முதுகலை-464		
முதலாமாண்டு	188	44
இரண்டாம் ஆண்டு	198	34
எம்ஃபில்-20		
முதலாமாண்டு	12	8
2017-2018 இளங்கலை-1260		
முதலாமாண்டு	401	19
இரண்டாம் ஆண்டு	407	13
மூன்றாம் ஆண்டு	414	6
முதுகலை-464		
முதலாமாண்டு	190	42
இரண்டாம் ஆண்டு	188	44
எம்ஃபில்-20		
முதலாமாண்டு	4	16

2018 ஜூன் 29] [திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்]

இக்கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு இட வசதி, வகுப்பறை வசதிகள் மற்றும் ஆய்வக வசதிகள் ஆகியவை போதுமானதாக உள்ளன. மேற்கண்ட மாணவர்கள் சேர்க்கைக்கு ஏற்றவாறு தற்போது உள்ள ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களைக் கொண்டு கல்லூரி செயல்பட்டு வருகிறது. மாணவர் சேர்க்கை முழுமையாக இல்லாததால் ஒவ்வொரு பாடப் பிரிவிலும் கூடுதலாக வகுப்புகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி

திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கட்டுப்பாட்டில் உள்ள அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரியில் மாணவியர் சேர்க்கை மற்றும் காலியிடம் பின்வருமாறு:

மாணவியர் சேர்க்கை விவரம்		**காலியிடம் விவரம்**
2015-2016 இளங்கலை-1506		
முதலாமாண்டு	502	—-
இரண்டாம் ஆண்டு	478	24
மூன்றாம் ஆண்டு	447	55
முதுகலை-120		
முதலாமாண்டு	57	3
இரண்டாம் ஆண்டு	34	26
2016-2017 இளங்கலை-1506		
முதலாமாண்டு	502	—-
இரண்டாம் ஆண்டு	502	—-
மூன்றாம் ஆண்டு	492	10
முதுகலை-120		
முதலாமாண்டு	46	14
இரண்டாம் ஆண்டு	57	3

மாணவியர் சேர்க்கை விவரம்		**காலியிடம் விவரம்**
2017-2018 இளங்கலை-1506		
முதலாமாண்டு	501	1
இரண்டாம் ஆண்டு	461	41
மூன்றாம் ஆண்டு	466	36
முதுகலை-120		
முதலாமாண்டு	56	4
இரண்டாம் ஆண்டு	47	13

இக்கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு போதுமான இட வசதி, வகுப்பறை வசதி மற்றும் ஆய்வக வசதிகள் ஆகியவை போதுமானதாக உள்ளன. மேற்கண்ட மாணவியர்கள் சேர்க்கைக்கு ஏற்றவாறு தற்போது உள்ள ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களைக் கொண்டு கல்லூரி செயல்பட்டு வருகிறது. மாணவியர் சேர்க்கை முழுமையாக இல்லாததால், ஒவ்வொரு பாடப் பிரிவிலும் கூடுதலாக வகுப்புகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, ஏற்கெனவே என்னிடம் கேட்டுக்கொண்டதுபோல, நீங்கள் ஒரு கேள்வி கேட்பதற்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் ஒரு கேள்வி கேட்பதற்கும் அனுமதி வழங்குகிறேன். ஒரு கேள்விதான் என்றாலும், நேரம் அதிகமாக எடுத்துக்கொள்ளாமல் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அவைமுன் வைக்கப்பட்ட விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில், 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான மாணவர்களுடைய சேர்க்கை விகிதம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டன்சத்திரம், தாராபுரம் மற்றும் மடத்துக்குளம் ஆகிய 3 தொகுதிகளிலும் அரசு கலைக் கல்லூரியோ அல்லது அரசு உதவிபெறும் கல்லூரியோ இல்லாத காரணத்தால், அந்தப் பகுதிகளில் வாழும் தாழ்த்தப்பட்ட,

2018 ஜூன் 29] *[திரு. அர. சக்கரபாணி]*

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, விவசாயப் பெருங்குடியைச் சேர்ந்த மாணவ, மாணவிகள், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்குட்பட்ட இரண்டு கல்லூரிகளைத்தான் நாடிச் செல்கிறார்கள். காரணம் அங்கே இரண்டு கல்லூரிகள்தான் இருக்கின்றன. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கட்டுப்பாட்டிலுள்ள பெண்கள் கல்லூரியில் மட்டும் இந்தாண்டு 3,100 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கின்றன. அதிலே, அரசு உதவி பெறும் திட்டத்தில் 500 மாணவிகள் பெண்கள் கல்லூரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். சுய நிதி திட்டத்தின்கீழ் 300 மாணவிகளும் சேர்க்கப்பட்டுள்ளனர். மேற்கொண்டு 2,300 மாணவிகளுக்கு கல்லூரியில் சேருவதற்கு இடமில்லை. அதைப்போல, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கட்டுப்பாட்டிலுள்ள ஆண்கள் கல்லூரியில் மட்டும் இந்தாண்டு 1,190 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கின்றன. அதிலே 400 மாணவர்கள் மட்டுமே கல்லூரியில் சேருவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். சுமார் 800 மாணவர்களுக்கு கல்லூரியில் சேருவதற்கு இடங்கள் இல்லை. கடந்த 2, 3 வருடங்களாக பொறியியல் படிக்கும் மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்து, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதை உணர்ந்துதான், அரசு ஒரு வாரத்திற்கு முன்பாக அரசு கலைக் கல்லூரிகளில் இந்தாண்டு 20 விழுக்காடு மாணவர்களை கூடுதலாக சேர்த்துக்கொள்ளலாம் என்று அரசாணை வெளியிட்டிருக்கிறது. புதியதாக 264 பாடத் திட்டங்களையும் இந்த ஆண்டு தொடங்கலாம் என்று அரசு அறிவித்திருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மற்றும் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வது, நான்கு தொகுதிகளிலும் இருக்கின்ற மாணவ, மாணவிகள் இந்த இரண்டு கல்லூரிகளில்தான் சேர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. தற்போது அரசு 20 விழுக்காடு மாணவர்களை அரசுக் கல்லுரிகளில் கூடுதலாகச் சேர்ப்பதற்கு அனுமதி வழங்கி இருக்கிறது.

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பேச ஆரம்பிக்கும்போதே கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள் என்று சொன்னேன்.*

திரு. அர. சக்கரபாணி: *3,000, 4,000 பேர் படிக்க முடியாமல் இருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையெல்லாம் ஒப்புக்கொள்கிறேன். அதைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. அர. சக்கரபாணி: ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களும் கலந்து பேசி, இந்த ஆண்டு அந்தக் கல்லூரியில் கூடுதலான மாணவர்களைச் சேர்ப்பதற்கு ஏதுவாக, அரசு கலைக் கல்லூரிக்கு கூடுதலாக 20 விழுக்காடு இடங்களை கொடுத்திருப்பதுபோல், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டில் வரும் கல்லூரிகளுக்கும் நீங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்குட்பட்ட நிதி அதிகமான அளவில் இருக்கிறது. எனது ஒட்டன்சத்திரம் தொகுதியில் கல்லூரி அமைப்பதற்குத் தேவையான, கோயிலுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. மூன்று இடங்களில் 200 ஏக்கர், 150 ஏக்கர் மற்றும் 100 ஏக்கர் என்ற அளவில் நிலங்கள் இருக்கின்றன. நிதியும் இருக்கிறது; நிலமும் இருக்கிறது. எனவே, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் மூலமாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அந்த இடத்தில் தொடங்கினால், அங்கு படிக்கின்ற ஏழை, எளிய மாணவர்கள் பழனிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படாது. 60 கி.மீ., 70 கி.மீ. தூரம் பயணம் செய்து, 3 பேருந்துகள் மாறி அந்தக் கல்லூரிக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் கல்லூரிக்கு மாணவர்கள் சேர்க்கை விகிதத்தையும் இந்த ஆண்டு அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்றும், கூடுதலான வகுப்புகளையும் இந்த ஆண்டு தொடங்கி ஏழை, எளிய மாணவர்களின் நலனைக் காக்கின்ற வகையில் அந்த மாணவர்களெல்லாம் அங்கு சேர்ந்து படிப்பதற்கு உதவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஒட்டன்சத்திரம் தொகுதியில் கல்லூரியை அமைக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களும் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் பேச்சை முடிக்கமாட்டேன் என்கிறார். அவரை என்ன செய்வது? எதிர்க்கட்சி கொறடாவாக இருந்து கொண்டு இவ்வாறு செய்கிறாரே? மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூன் 29]

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள், இருங்கள், உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் ஒரு கேள்வி கேட்பார். அதையும் கேட்டுவிடட்டும். இரண்டுக்கும் சேர்த்து பதில் சொல்லிவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், திரு. அர. சக்கரபாணி அவர்களே இரண்டு கேள்விகளுக்குமேல் கேட்டுவிட்டார். நீங்கள்* short *ஆகக் கேளுங்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் கட்டுப்பாட்டின்கீழ் 1963 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி இளங்கலை பாடத் திட்டத்தில் 16 பாடப் பிரிவுகளும், முதுகலை மற்றும் ஆராய்ச்சி பாடத் திட்டங்களில் கிட்டத்தட்ட 18 பாடத் திட்டங்களும் கொண்டு ஆண்டுக்காண்டு விரிவுபடுத்தப்பட்டு இயங்கிவருகின்றன. எனக்கு முன்பு பேசிய எங்கள் கட்சியினுடைய கொறடா அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, அங்கேயிருக்கக்கூடிய பெண்கள் மற்றும் ஆண்கள் கலைக் கல்லூரிகள்,* Aided *மற்றும்* Self-finance *இரண்டிலும்—இவற்றில் அனுமதிக்கப்பட்ட இடங்களைத் தவிர்த்து—அனுமதிக்கப்பட்ட இடங்கள் 1,500 என்றால், 4,500-க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் அங்கே பெறப்பட்டிருக்கின்றன. எனவே, நான் உங்கள் வாயிலாக இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, 4,500 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கக்கூடிய நிலையில், இந்த ஆண்டு பல மாணவர்கள் அந்தக் கல்லூரியில் சேர இயலாத நிலை ஏற்பட்டிருக்கிறது.*

குறிப்பாக, என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் கிழவரை என்கின்ற ஊர் உள்ளது. அங்கிருந்து கிட்டத்தட்ட 100 கி.மீ. தூரம் இருக்கின்ற பழனிக்கு வந்துதான் படிக்க வேண்டிய சூழல் அந்த மாணவர்களுக்கு உருவாகியிருக்கிறது. குறிப்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையில் 'மாணவர் சேர்க்கை இல்லாத காரணத்தினால்' என்ற செய்தியை அதில் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வளவு விண்ணப்பங்கள் இந்தக் கல்லூரிக்கு மாணவர்களால் வழங்கப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் எப்படி 'மாணவர் சேர்க்கை இல்லாத காரணம்' என்பதை நீங்கள் குறிப்பிட்டீர்கள் என்பது எனக்கு புரியவில்லை.

பிற்பகல் 12-15

அதுமட்டுமல்ல, குறிப்பாக ஆண்கள் கல்லூரியில் U.G.-ல் 634 இடங்களுக்கு 1,650 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. P.G.-ல் 354 இடங்கள் உள்ளன. அதேபோல, Ph.D.-ல் 26 இடங்கள் உள்ளன. எனவே, தயவுசெய்து இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களிடம் நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவது, போதிய நிதியும் இருக்கிறது, இடமும் இருக்கிறது. 1963 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி, கல்லூரியின் பெயரே கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி. எனவே, இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவது ஒரு பல்கலைக்கழகமாக இந்தக் கல்லூரியை மாற்றலாம். ஏனென்று சொன்னால், இரண்டு கல்லூரிகள் இருக்கின்றன. மாணவர்கள் அதிகமாகப் படிக்கிறார்கள். அண்ணன் கொறடா அவர்கள் சொன்னதைப்போல அவருடைய பகுதிக்குக்கூட ஒரு கல்லூரியைக் கொண்டுவரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செந்தில்குமார், முடியுங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு என்றால் ஏன் இப்படி? (குறுக்கீடு) நேரத்தைப் பாருங்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: அதுமட்டுமல்ல, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின்கீழ் கல்லூரிகள் எல்லாம் இருக்கின்றன. இருபாலரும் பயிலக்கூடிய ஒரு கல்லூரியை பழனியில் கொண்டுவந்து ஒரு பல்கலைக்கழகமாக உருவாக்குவதற்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும். ஒரேயொரு செய்தி, என்னுடைய தொகுதிக்குட்பட்ட கொடைக்கானலில் தோட்டக்கலைப் பண்ணையின் கட்டுப்பாட்டின்கீழ் 23 ஏக்கர் நிலம் நாயுடுபுரம் என்ற பகுதியில் இருக்கிறது. அந்த இடத்தை அவர்களும் வழங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். நிதியும் இருக்கிறது. அங்கே இருபாலரும் பயிலக்கூடிய ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைக் கொண்டுவருவீர்களேயானால் மலைப் பகுதிகளில் வாழக்கூடிய மிகவும் பின்தங்கிய பழங்குடி இன மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கே பயில்வதற்குரிய வாய்ப்பு உருவாகும் என்பதை இந்தக் கேள்வியின் வாயிலாக தங்கள்மூலம் அரசிடம் எடுத்துச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூன் 29]

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய கவன ஈர்ப்பு அறிவிப்பு மீதான விவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கட்டுப்பாட்டில் உள்ள அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி மற்றும் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி ஆகிய கல்லூரிகள் நல்லமுறையில் செயல்பட்டு வருவதால், பல்கலைக்கழக மானியக் குழுவின் தன்னாட்சி அமைப்பான தேசிய தர மதிப்பீட்டுக் குழுவில் ஒட்டுமொத்த சாதனைகள் மற்றும் சிறந்த செயல்பாட்டுக்கான 'A' சான்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்தக் கல்லூரிகளில் அனைத்து இடங்களுக்கும் மாணவர் சேர்க்கை நடைபெற்று முடிவுற்றுள்ள நிலையில், கடந்த 2015-2016 ஆம் ஆண்டில் அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரியில் பட்டப் படிப்பில் அனுமதிக்கப்பட்ட 420 இடங்களில் 6 இடங்கள் காலியாகவும், முதுகலைப் பட்டப் படிப்பில் அனுமதிக்கப்பட்ட 232 இடங்களில் 34 இடங்கள் காலியாகவும் உள்ளன. அதேபோன்று முதுநிலை ஆய்வியலில் நிறைஞர் எம்ஃபில் படிப்பில் அனுமதிக்கப்பட்ட 20 இடங்களில் 3 இடங்கள் காலியாக உள்ளன. மேலும், 2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டுகளில் இதே நிலை தொடர்ந்தது. மேலும், அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கல்லூரியைப் பொறுத்தவரையில், அனுமதிக்கப்பட்ட 502 இளங்கலை பட்டப் படிப்பு இடங்களில் சேர்க்கப்பட்ட மாணவிகளில் சிலர் இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு படிப்பின்போது இடை நின்றுவிடுகிறார்கள். உதாரணமாக 2015-2016 ஆம் ஆண்டில் இரண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு படிப்பின்போது மொத்தம் 55 மாணவிகள் இடை நின்றுவிட்டார்கள். அதேபோன்று முதுகலைப் படிப்பிலும் 2015-2016 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட 60 இடங்களில் முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு படிப்பின்போது மொத்தம் 26 மாணவிகள் இடை நின்றுள்ளார்கள். மேலும், போதுமான மாணவிகள் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் இல்லை. எனவே, ஒவ்வொரு பாடப் பிரிவிலும் கூடுதலாக வகுப்புகள் ஏற்படுத்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி மற்றும் அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி நிருவாகத்தால், மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 16-5-2018 மற்றும் 25-6-2018

[திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்] [2018 ஜூன் 29

நாளிட்ட கடிதங்களில் 2018-2019 ஆம் கல்வியாண்டுக்கான இளநிலை மற்றும் முதுநிலை பாடங்களுக்கு கூடுதலாக முறையே 15 மற்றும் 20 சதவிகித மாணவர்களை சேர்ப்பதற்கு பல்கலைக்கழகத்தின் அனுமதி கேட்டுள்ளது. எனவே, மாண்புமிகு அம்மாவின் அரசால் அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி மற்றும் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் அனுமதி பெற்று கூடுதலாக மாணவர்களைச் சேர்க்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளுக்குக் கல்லூரிகள் வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அந்த கோரிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டு, தேவையின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று அந்தக் கல்லூரிகள் தொடங்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கிறது. நீங்கள் கொடுத்ததை துறைக்கு அனுப்பியிருக்கிறேன். பதில் வந்ததும் ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. பதில் வந்தால்தான் எடுத்துக்கொள்ள முடியும். இன்றைக்கு இரண்டு கவன ஈர்ப்பு அறிவிப்புகளை எடுத்திருக்கிறேன். பதில் வந்தால் எடுத்துக்கொள்வதில் எனக்கு கஷ்டம் ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) திரு. அன்பரசன், நீங்கள் கேட்டதற்கு எனக்கு பதில் வரவேண்டும். முறையாக அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். பதில் வரும். (குறுக்கீடு) இதை நீங்கள் நிர்பந்தம் செய்ய முடியாது. அவர்களிடம் அறிக்கை வாங்கி அதற்குப் பிறகுதான் தர முடியும். அமைச்சர்கள் எல்லாம் பார்த்ததற்குப் பிறகுதான் தர முடியும். நீங்கள் கேட்பதுபோன்று அவசரத்திற்கு தர முடியாது. (குறுக்கீடு) பதில் வரும்போது எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். இதையெல்லாம் நீங்கள் வற்புறுத்தக் கூடாது.